# யாழ்ப்பாண மாவட்ட ஆரம்பக் கல்விப் பாடசாலைகளில் 2003 ஆம் ஆண்டிலிருந்து சிறுவர் நட்புறவுப் பாடசாலைச் செயற்றிட்டத்தை அமுலாக்கலும் பிரச்சினைகளும்

**பா. தனபாலன்**

Jaffna National College of Education, Kopay, Sri Lanka
thanapalanabi@gmail.com

**சுருக்கம்:** இலங்கையின் கல்வி விருத்தியில் ஆரம்பக் கல்வி மிக முக்கியமான கட்டமாக நோக்கப்படுகின்றது. 1998 இல் ஆரம்பமாகி 2003 இல் இக்கல்விச் சீர்திருத்தம் இலங்கையில் அமுலாக்கப்படத் தொடங்கியது. இதனை உள்வாங்கி யுனிசெவ் (UNICEF) நிறுவனம் 2002ஆம் ஆண்டிலிருந்து கல்வியமைச்சுடனும், தேசியக் கல்வி நிறுவகத்துடனும், மாகாணக் கல்வியமைச்சுக்களுடனும் இணைந்து சிறுவர் நட்புறவுப் பாடசாலை (child friendly school) செயற்றிட்டத்தை இலங்கையின் ஆரம்பக் கல்விப் பாடசாலைகளில் அமுலாக்கி வருகின்றது. "முழுமையான கவனமுடைய தொடர்ச்சியான மதிப்பும், வரவேற்புமுடைய, ஆதரவு கிடைக்கின்ற, இயலுமைகளுக்கும் இயலாமைகளுக்கும் பொருத்தமானவாறு உணர்வு காட்டுகின்ற, பூரணமான பாதுகாப்புடன் பாடசாலைகளில் தமது திறன்களை உச்ச அளவுக்கு வளர்த்துக் கொள்ளும் வகையிலான சூழலை உருவாக்குதல்" சிறுவர் நட்புறவுப் பாடசாலையின் வரைவிலக்கணமாக உள்ளது. இதன்படி சிறுவர் நட்புறவுப் பாடசாலைகளில் மாணவர்கள் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் காணப்படுவர். ஆசிரியர் உற்சாகத்துடன் கற்பிப்பர். பாடசாலைக்கு பெற்றோர்களாலும் சமூகத்தாலும் ஆதரவு அளிக்கப்படும். மகிழ்ச்சிகரமான கற்றல்-கற்பித்தலினூடாக மாணவர்கள் தங்கள் திறமைகளால் சாதனை புரியும் சூழல் ஏற்படும். இதன்படி சிறுவர் நட்புறவுப் பாடசாலைகளின் வெளிப்பாடுகளாகத் தரமான கற்றல், இடைவிலகல், வரவின்மை குறைவு, பாதுகாப்பான பாடசாலைச் சூழல், சுகாதாரம், குடிநீர், மலசலகூடவசதி, அதிபர் ஆசிரியர்களுக்கு உயர்வான பயிற்சி, மனப்பாங்கு மாற்றம், விளையாட்டு, நூலகம், கணினி வசதிகள், மாணவர்-ஆசிரியர்-பெற்றோர்-அதிபரிடையே உயிர்ப்பான தொடர்புகள் வலுப்பெறும். இவ்வகையில் 2003 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்திலும் சிறுவர் நட்புறவுப் பாடசாலைகள் செயற்றிட்டம் அமுலாகி வருகின்றது. இது ஆரம்பக்கல்விச் சீர்திருத்த நோக்கோடும் இயைபுபட்டுள்ளது. ஆனாலும், அமுலாக்கப்பட்ட ஆரம்பகாலத்தில் மிகக் கடுமையான யுத்தமும், பாதைத்தடையும் காணப்பட்டன. இச் செயற்றிட்டம் தொடர்பான செயலமர்வுகளில் அதிபர், ஆசிரியர், கல்விப் பணிப்பாளர்கள், (தேசிய கல்வி நிறுவகம், மகாணக் கல்வி அலுவலகம், கல்வியமைச்சு) பங்குகொள்ள முடியாத சூழ்நிலைகள் காணப்பட்டன. அத்துடன் இச்சிறுவர் நட்புறவுப் பாடசாலைகள் செயற்றிட்ட அமுலாக்கல் தொடர்பாக பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இப்பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு பின்வருமாறு இந்த ஆய்வின் குறிக்கோள்கள் தீர்மானிக்கப்பட்டன: (i) சிறுவர் நட்புறவுப் பாடசாலையின் செயற்றிட்டத்தை அமுலாக்குகையில், யுத்த சூழல், போக்குவரத்துத்தடை ஆகியன எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தின என்பதை மதிப்பிடல். (ii) இதனைத் தவிர இச்செயற்றிட்டத்தை அமுலாக்க தடையாகவுள்ள காரணிகளை இனங்காணல். (iii) சிறுவர் நட்புறவுப் பாடசாலைகள் செயறிட்டத்தை மேலும் சிறப்பாக அமுலாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தியம்பல். (iv) இத்துறை சார்ந்த ஆய்வுகளுக்கு வழிகாட்டல். யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஆரம்பப்பாடசாலைகளுடனான தரவு சேகரிப்பு மூலம், சிறுவர் நட்புறவுப் பாடசாலைச் செயற்றிட்டத்தை சிறப்பாக அமுலாக்குவதற்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் இந்த ஆய்வில் முன்வைக்கப்படுகின்றன.

என்ற வகையில், பின்வரும் கருதுகோள்கள் உருவாக்கப்பட்டன: சிறுவர் நட்புறவுப் பாடசாலைச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் யுத்த சூழல் போக்குவரத்துத்தடை தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் இச்செயற்றிட்டத்தை அமுலாக்க மேலும் பல பிரச்சனைகள் உள்ளன. இவ்வாறான நிலைமைகளை மாற்றி சிறுவர் நட்புறவுப் பாடசாலைச் செயற்றிட்டத்தை மேலும் சிறப்பாக அமுலாக்க முடியும். மேற்படி கருதுகோள்களைப் பரீட்சிப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தின் ஐந்து வலயங்களிலும் படைகொண்ட எழுமாற்று மாதிரியை (Stratified sampling method) பயன்படுத்தி 196 பாடசாலைகள் ஆய்வுக் குடித்தொகையாகத் தெரிவு செய்யப்பட்டன. வினாக்கொத்து, அவதானிப்பு, நேர்காணல், குவிமையக் கலந்துரையாடல்கள், கலந்தாய்வுகள், ஆவணப் பகுப்பாய்வுகள் மூலம் தரவுகள் பெறப்பட்டன. இத்தரவுகள் சாதாரண வீத அளவுகளிலும், Minitab என்ற கணினி மென்பொருளைப் பயன்படுத்தியும் பகுப்பாய்வு செய்யப்பட்டன. தரவுகளைப் பகுப்பாய்வு செய்ததிலிருந்து பின்வரும் விடயங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. யுத்த சூழல் போக்குவரத்துப் பாதைகள் மூடப்பட்டதால் அதிபர், ஆசிரியர்கள், கல்விப் பணியாளர்களுக்கு போதுமான அளவு இச் செயற்றிட்டம் தொடர்பான செயலமர்வுகளில் கலந்து கொள்ளவில்லை. இதனால் பாடசாலைகளில் சிறுவர் நட்புறவுப் பாடசாலைச் செயற்றிட்டம் பூரணமாக அமுலாக்கப்படவில்லை. இச் செயற்றிட்டத்தை மேற்கொள்ள போதுமான நிதி, பௌதீக நிலைகள் காணப்படவில்லை. மனப்பாங்கு ரீதியாக இச்செயற்றிட்டம் தொடர்பான நடைமுறைகள் பெருமளவான பாடசாலைகளில் காணமுடியவில்லை. யுத்தத்தின் பின்னர் அமைதியான சூழல் ஏற்பட்டுள்ள நிலையிலும் இச்செயற்றிட்ட நடைமுறைகளை மேலும் வினைத்திறனாக்க வேண்டியுள்ளது. சமகால அறிவு மையச் சமூகத்தில் ஆய்வுகள் மிக உயர்ந்த வாய்ப்புக்களை வழங்குகின்றன. கல்வியின் அபிவிருத்தி நோக்கிய சிக்கல் நிறைந்த செயன்முறைகளை விளங்கிக் கொள்ள உதவுகின்றன. யாழ்ப்பாண மாவட்ட ஆரம்பப் பாடசாலைகளில் 2003ஆம் ஆண்டிலிருந்து சிறுவர் நட்பறவுப் பாடசாலைச் செயற்றிட்டத்தை அமுலாக்கலும் பிரச்சனைகளும் என்ற இந்த ஆய்வு, கொள்கை வகுப்போர், அனுசரணையாளர்கள், கல்விப்பணியாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்களுக்கிடையிலான இணைப்புக்களை வலுவூட்டும் புதிய ஆய்வுகள் மேற்கொள்ள வழிகாட்டும்.